## பாலர் பிரிவு

# சைவசமயகுரவர்

சைவசமயகுரவர் நால்வர். அவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர். மாணிக்கர் ஆகியோர். இவர்கள் சிவபெருமானைப் போற்றிப் பல பாடல்களைப் பாடியுள்ளனர். பல அற்புதங்கள் செய்துள்ளனர். இவர்களுள் முதல் மூவர் பாடியவை தேவாரங்கள் என்பர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரைத் தேவார முதலிகள் எனவும் அழைப்பர். மாணிக்கவாசக சுவாமிகள் பாடியவை திருவாசகம், திருக்கோவையார் என்பனவாம்.

சம்பந்தர் பாடிய தேவாரங்கள் 1ம், 2ம், 3ம் திருமுறைகளாகும். அப்பர் பாடியவை 4ம், 5ம், 6ம் திருமுறைகளாகும். சுந்தரர் பாடியது 7ம் திருமுறையாகும். மாணிக்கர் பாடியது 8ம் திருமுறையாகும்.